https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

21st MAY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 28



## சஜித் பிரதமரா?

06




## சஜித்தை அழித்துவிடுவார் ரணில்

05

# மாகாண சபை தேர்தலை நடத்துங்கள்:

# இந்தியா ஜனாதிபதிக்கு அழுத்தம்



02

## சாராய போத்தலின் உண்மையான விலை ரூ.294

### சந்தையில் 2940 ரூபா

அதி விசேஷ வகை சாராய போத்தல் ஒன்றின் உண்மையான விலை 294 ரூபா என்றும் சந்தையில் அதன் விற்பனை விலை 2940 ரூபா என்றும்

02




## 18,900 கோடி ரூபா பணம் அச்சடிப்பு

கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கியால் 18,900 கோடி ரூபா பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

அதேபோல் 18000 ரூபா பணத்தை மத்திய

02






## இரண்டாவது தவணை கடனை வழங்குவதற்கு

### 4 விடயங்களில் IMF சோதனை

IMF நிதியத்தின் இரண்டாவது தவணை கடனை இலங்கைக்கு வழங்குவதற்கு IMF 4 விடயங்களில் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேசிய கடன் மறுசீரமைப்பு, மத்திய வங்கியை சுயாதீனமாக்கும் சட்டமூலம்,அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் மற்றும் அரசு செலவு ஆகிய நான்கு விடயங்களை சோதிக்கவுள்ளது.

இதற்காக இலங்கை வந்திருக்கும் IMF விசேட நிபுணர்கள் இந்த சோதனையை நடத்துவர்.



புது சுடர்
www.puthusudar.lk
2023 MAY 21 - SUNDAY

# ஜனாதிபதி போட்டி

கிடைக்கவே முடியாது என்றிருந்த-மக்கள் தரமாட்டார்கள் என்றிருந்த பெரும் பதவி -ஜனாதிபதி பதவி கிடைத்துவிட்டது.

எம்பி பதவியைக்கூட அவர்கள் வழங்கவில்லை.அப்படி இருக்கும்போது ஜனாதிபதி பதவியை வழங்குவார்களா?

ஆனால்,நாட்டின் பொருளாதார நிலைமை-முன்னாள் ஜனாதிபதி பார்த்த வேலை ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை மிக இலகுவாகக் கொடுத்துவிட்டது.

அதைத் தக்கவைத்துக்கொள்வது மட்டுமல்ல அடுத்த தடவையும் அந்தப் பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.மக்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் ரணிலின் இப்போதைய இலக்கு.

அதற்காகத்தான் அவர் இப்போது நாய் நகர்த்தி வருகிறார்.

அவர் முட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கும் மொட்டு கட்சி அவரைத் தொடர்ந்தும் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

ராஜபக்ஸ குடும்பத்துக்கு அப்போது உடனடி பாதுகாப்பொன்று தேவைப்பட்டது.அதை வழங்குவதற்கான சிறந்த மனிதர் ரானில்தான் என்பதை அறிந்தார்கள்.அதனால்தான் உடனடியாக அவரை ஜனாதிபதியாக நியமித்து தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டார்கள்.

இப்போது அவர்களின் பாதுகாப்பு நூறு வீதம் உறுதியாகிவிட்டது.அவர்களால் வீதிக்கு இறங்க முடியும்கூட்டங்களை நடத்த முடியும்மக்களை சந்திக்க முடியும்.அப்போதுபோல் இப்போது மக்களின் எதிர்ப்புகள் கிடையாது.

இனிப் பாதுகாப்பு வழங்குபவர் தொடர்ந்தும் தேவைப்படமாட்டார்.பாதுகாப்பு பிரச்னை ஏற்பட்டால்தானே பாதுகாப்பு ஊழியர் தேவை.

இதனால் மீண்டும் ராஜபக்ச குடும்பத்தின் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.தொடர்ந்தும் ரணிலில் தங்கி இருக்க முடியாது.மஹிந்தவை அடிப்படையாகக் கொண்டோ அல்லது பசிலை அடிப்படையாகக் கொண்டோ அல்லது நாமலை அடிப்படையாகக் கொண்டோ மொட்டு கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்கான தேவை அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச குடும்பத்தில் இருந்து ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அக்கட்சி விரும்புகிறது.அவர்கள் மெல்ல மெல்ல இக்கருத்தை மக்கள் மயப்படுத்தத் தொடங்கியுள்ளதைக் காணலாம்.

மொட்டுக் கட்சியின் வேட்பாளராகத் தானே நிறுத்தப்படுவேன் என்று ரணில் முதலில் நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால்,நிலைமை மாறிவருவதை அவதானிக்கிறார்.

ஆனால்,அந்தக் கட்சிக்குள் தனக்கென்று ஒரு ஆதரவுத் தளத்தை அவர் உருவாக்கியுள்ளார். ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் அந்தக் கட்சி இரண்டு பிரிவாக நிற்கிறது.

ஒரு பிரிவு ராஜபக்ச குடும்பத்தின் பக்கம்.அடுத்த பிரிவு ரணிலின் பக்கம். ஆனால்,இப்போது இருக்கிறவர்களின் ஆதரவை மாத்திரம் வைத்து தேர்தலில் வெற்றிபெற முடியாது.இன்னும் பலரது ஆதரவு தேவை.அதனால்தான் அவர் ஏனைய கட்சிகளின் எம்பிக்களுக்கு வலை வீசுகிறார்.

ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமான ஆதரவு மொட்டுக்குள் இருக்கும்போது எதற்காக ஏனைய கட்சிகளுக்கு ரணில் வலை வீசுகிறார் என்ற கேள்வி பலருக்கு எழலாம்.

காரணம் இதுதான்.ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்காக அவர் ஆட் சேர்க்கவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே ஆட் சேர்கிறார்.

அவரின் பின்னால் ஆட்கள் ஓரளவாவது சேர்வதற்குக் காரணமாக இருப்பது இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவாவது அவர் தீர்வை முன்வைத்திருப்பதுதான்.

கோத்தாவின் ஆட்சியில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு,அதற்கான வரிசை,மின்வெட்டு போன்றவற்றை முற்றாக நீக்கியுள்ளார். எரிபொருட்களின் விலைகளை கட்டங்கட்டமாகக் குறைக்கத் தொடங்கியுள்ளார்.சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெற்றுள்ளார்.

இந்த உடனடிப் பிரச்சினையை அவர் தீர்த்துள்ளதால் அவர் இருக்கின்ற எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் என்று சிலர் நம்புகிறார்கள்.அப்படி நம்புகிறவர்கள் அவர் பின்னால் செல்வதற்குத் தயாராகின்றனர்.

அப்படித் தயாராகுபவர்கள் மொட்டு கட்சியிலும் உள்ளார்கள்.ஐக்கிய மக்கள் சக்தியிலும் உள்ளார்கள்.ஜனாதிபதி பதவியில் இருக்கின்ற மிகுதிக் காலத்தில் இன்னும் சில முக்கியமான வேலைகளை செய்து மேலும் பலரை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஆக,இனி மொட்டுக்குள் இருக்கின்ற ராஜபக்ச ஆதரவாளர்களும்-மொட்டுக்கள் இருக்கின்ற ரணில் ஆதரவாளர்களும் முட்டி மோதப்போவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

ரணிலின்தான் மொட்டின் பொது வேட்பாளர் என்று ஒரு தரப்பும் இல்லை ராஜபக்ச குடும்பத்தில் இதுதான் பொது வேட்பாளர் என்று இன்னொரு தரப்பும் இப்போதே சத்தம் போடத் தொடங்கியுள்ளதை நாம் காண்கிறோம்.இந்தச் சத்தம் நாட்கள் செல்ல செல்ல ஓங்கி ஒலிக்கப்போகிறது.

## மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

பல வருடங்களாக கிடப்பில் கிடக்கும் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வருவதாக ஜனாதிபதியின் நெருங்கிய வட்டாரம் தெரிவிக்கிறது.

2017 இல் மாகாண சபைகளின் ஆயுட் காலம் முடிந்ததில் இருந்து மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அப்போது இருந்த மைத்திரி-ரணில் அரசும் சரி,அதன் பின் உருவான கோத்தாபய ராஜபக்சவின் அரசும் சரி அந்தத் தேர்தலை நடத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2017 இல் இது தொடர்பில் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அதை நிறைவேற்றுவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில்தான் உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலமும் நிறைவடைந்துள்ளது.அந்தத் தேர்தலை நடத்துவதற்குக்கூட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசின் கவனமோ ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்தான். அதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து வருகிறார்.

இந்த நிலையில்தான் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நாடத்துமாறு இந்தியா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது என்று அறிய முடிகிறது.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்று ஒரு வருடமாகிறது. ஆனால்,அவர் இந்திய பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு இந்திய அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அதற்குக் காரணம் மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்தாமல் இருப்பதே என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

# சமய வழிபாடுட்டு நிகழ்வில் கிழக்கின் புதிய ஆளுநர்!



(அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் வியாழனன்று (18) திருகோணமலையிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள, கிறிஸ்த்தவ மதஸ்தளங்களுக்கு விஜயம் செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று (17) புதிதாக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் வெள்ளிக்கிழமை (19) காலை 9.30 மணியளவில் தனது கடமைகளை பொறுப்பேற்றமையும குறிப்பிடத்தக்கது.



## 18,900...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வங்கி கடனாகவும் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் மத்திய வங்கி இலங்கை அரசுக்கு கடந்த வரம் 36,900 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

பணம் அச்சடிக்க வேண்டாம் என்று சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு உத்தரவிட்டுள்ள நிலையில்தான் இந்த அச்சடிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாராய...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தெரிவிக்கப்படுகிறது.

மிகுதி 2644 ரூ தொகையானது அரசு அரவிடுகின்ற வரியும் உற்பத்தியாளர்களின் இலாபமுமாகும்.என ஹலால் வரி திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.


பல வரிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.இதனால்தான் இதன் விலை இந்தளவு அதிகரித்துள்ளது.

இதனால் மது பாவனை 40 வீதத்தால் குறைவடைந்து கசிப்பு பாவனை அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலப்பிட்டிக்கும் மது உற்பத்தியாளர்களுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது,

அந்த சந்திப்பின்போது வரியை இரண்டாயிரம் ரூபாவால் குறைக்குமாறு உற்பத்தியாளர்களில் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

எது எப்படியோ மதுவின் விலையை குறைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.








ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து

# நாடு பூராகவும் 100 கூட்டங்கள்

நாடு பூராகவும் ஐக்கிய தேசிய கட்சியின் 100 தொகுதிக் கூட்டங்களை நடத்துமாறு அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க கட்சியின் செயலாளர் பாலித ராங்கேபண்டாவிடம் அறிவுரை வழங்கியுள்ளார்.

அந்த வகையில்,ஜூலை மாதமளவில் 80 கூட்டங்களை நடத்தி முடிக்க இயலும் என்று பாலித ஜனாதிபதியிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தொகுதிக் கூட்டங்கள் இப்போது நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்றன.

2024 இல் இடம்பெறப்போகின்ற ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசிய கட்சியை கிராம மட்டத்தில் பலப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று கட்சி வட்டாரம் கூறுகிறது..



ஜனாதிபதித் தேர்தலில் போட்டி:

# அழைப்பு வந்தால் ஏற்பேன்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தி தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதை ஏற்கத் தயார் என்று சரத் பொன்சேகா எம்பி கூறியுள்ளார்.அவர் இதுதொடர்பில் மேலும் கூறுகையில்

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு எனக்கு இதுவரை யாரும் அழைப்பு விடுக்கவில்லை. ஆனால்,என்னை சந்திப்பவர்கள் எல்லாம் சொல்வது இப்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றால் உங்களை போன்ற ஒருவர் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று.

நான் இப்போது அரசியல் செய்வது ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு அதற்குள் இருந்து அழைப்பு வந்தால் ஏற்றுக்கொள்வேன்.

இந்த நாடு பொருளாதாரரீதியில் சீரழிவதற்குக் காரணம் ஊழல்,மோசடிகள்தானே தவிர பொருளாதார நிபுணர்கள் அல்லர்.

ஊழல் மிக்க அரசியல்வாதிகளும் அவர்களின் ஆதரவு பெற்ற ஊழல்மிக்க வர்தகர்களுமே இந்த நாட்டைச் சீரழித்தனர்.

இவர்களிடமிருந்து நாம் நாட்டைப் பாத்துக்க வேண்டும்.ரணில் விக்ரமசிங்க சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கினார் என்பதற்காக இந்த நாடு முன்னேறிவிடாது.என்றார்.

# வர்த்தகர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக இருக்கக் கூடாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச




சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் முன்னேற்றத்திற்கு வேறாக்கப்பட்ட தனி பிரிவொன்று நாட்டு நிர்வாகியின்கீழ் செயல்படுத்தப்பட்டு தெளிவானதொரு கொள்கையுடன் குறிப்பிட்ட கால அட்டவணையுடன் இலக்குடனானபாரிய வேலைத்திட்டத்தை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி தயார் எனவும்,பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் நலனுக்காக தாம்முன்நிற்பதாகவும்,இதனை ஓர் சட்ட கட்டமைப்பினுள் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான பாதைதிறக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நாட்டு வர்த்தகர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறாமல் வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்குப்பதிலளிக்கும் கட்டமைப்பொன்றை நாட்டில் உருவாக்குவதே இடம்பெற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டினார்.

தொழில் முயற்சியாண்மையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் பழைய போக்கைகைவிட்டு, முறைமையொன்றின் ஊடாக பதில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்குவது அரசியல்வாதிகளின்பொறுப்பாகும் எனவும்,பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படத்தன்மை கொண்ட கட்டமைப்பு அமையும்போது,இலஞ்சம் மற்றும் கப்பம்

போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு வங்குரோத்து சூழ்நிலையில் அரசியல்வாதிகளே முதலில் அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும்என்றும், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் அத்தகைய அர்ப்பணங்களைச் செய்யதயார் எனவும்,குபேரர்களின் கடன்களை தள்ளுபடி செய்வது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்படும் அதேவேளையில்,சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் கடனை அறவிட கடுமையான முறைகளை கையாள்வதுவன்மையாக கண்டிக்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு தரப்பினருக்கும் விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டு கவனிப்பு மேற்கொள்ளப்படுவதைஅனுமதிக்கப்போவதில்லை எனவும்,சட்டம் அனைவருக்கும் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும்எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுடன் இன்று(19) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

# தபால் திணைக்களத்துக்கு 700 கோடி ரூபா நஷ்டம்

Sri Lanka POST
ශ්‍රී ලංකා තැපැල් · இலங்கை அஞ்சல்

தபால் திணைக்களத்துக்கு கடந்த வருடம் 700 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் செலவு 15.3 வீதத்தால் அதிகரித்தமையே இந்த நஷ்டத்துக்கு காரணம் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

நஷ்டமடையும் அரச நிறுவனங்களையும் இலாபமடையும் நிறுவனங்களையும் தனியார்மயப்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில்தான் இந்த செய்தி வெளியாகியுள்ளது.

இதனால் தபால் திணைக்களத்தையும் தனியார்மயப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

SHAMNA TEX
WHOLESALE & RETAIL DEALERS IN SHALWARS, CHOLIES CHILDREN'S WEAR, SKIRT & BLOUSE, POPLINE ETC.


No: 36/03, MAHA VIDYALAYA Mw. Colombo - 13.



தொடர் 01



# பிரபாவின் இறுதி நிமிடம்...!!



ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

## நந்திக்கடலை நோக்கி... பிரபாகரனைத் தேடி பெரும் படை நகர்வு...



படை நகர...அதற்கு முன்பே வீழ்கின்றன குண்டுகள் புலிகளின் பங்கர்கள் மீது...
துல்லியமாகத் தாக்குகின்றன கபீர் விமானங்கள்.
அது போதாதென்று பீரங்கிகளும் கவச வாகனங்களும்...
எல்லாம் மழையாய்ப் பொழிய....மடிந்தே போகிறார்கள் புலிகள்.அந்த பங்கர்களுக்குள்...
மடிந்தவர்கள் போக..எஞ்சியவர்கள் பின்னோக்கி...
ஆனால்,படையினரோ முன்னோக்கி...

போர் முடிந்து 14 வருடங்கள். பிரபாகரன் செத்தும்தான்...

இறக்கவில்லை என்கிறது ஒரு கூட்டம். இறந்துவிட்டார் என்கிறது ஆதாரம்.

உண்மையில் நடந்தது என்ன...???

அந்த ஆதாரம்தான் என்ன..???

அதைத்தான் பார்க்கப் போகிறோம் இந்தத் தொடரில்...

பிரபாகரனுக்கு தொடர்ச்சியாக உயிர் கொடுத்து வரும் பழ.நெடுமாறன் போன்றவர்களுக்கும் பதிலாக அமையும் இத்தொடர்.

இதுவொரு கற்பனைத் தொடரல்ல.

போர்க் களத்தில் நின்று போரிட்ட–புலித் தளபதிகள் பலரைப் போட்டுத் தள்ளிய–பிரபாவின் கதையை முடித்த படை வீரர்களின் சாட்சியம்.

நேரடி சாட்சியம்.எல்லாமே நேரடி...

மூன்று வருடங்களை கொண்டது இறுதிப் போர்.

அதில் ஆறு நாட்கள் நந்திக்கடலுக்குரியது...பிரபாவுக்குரியது.

அதுதான் இறுதி ஒபரேஷன்.

அத்தோடு எல்லாம் சரி.பிரபாவும் சரி.

நந்திக்கடலை நோக்கிய படை நகர்வு–பிரபாவை இலக்கு வைத்த அந்த நகர்வு படுபயங்கரமானது.

வாருங்கள் நுழைவோம் அதற்குள். நந்திக்கடலுக்குள்...

ஒரு வழியால் அல்ல.பல வழிகளால் நகர்வு.

59 ஆவது படையணி ஒரு திசையால்...

53 ஆவது படையணி இன்னொரு திசையால்...

57 ஆவது படையணி வேறொரு திசையால்...

58 ஆவது படையணி மற்றுமொரு திசையால்...

நாம் முதலில் நகரப்போவது 59ஆவது படையணியோடு...

59 ஆவது படையணியின் கட்டளை தளபதி ஜெனெரல் நந்தன உடவத்த. பிரிகேடியர் பிரசன்ன சில்வா உள்ளிட்ட தளபதிகள் தீவிர ஏற்பாடு.நந்திக்கடல் படை நகர்வு க்கு...

2009 மே 14ஆம் திகதி.காலை 4 மணி.

நந்திக்கடலை நோக்கி நகர்கிறது 59ஆவது படையணி.நந்திக்கடலின் தெற்கு திசையில்...

கபீர் விமானங்கள்....கவச வாகனங்கள்... பீரங்கிகளின் உதவியோடு...அவற்றின் தாக்குதலோடு...

படை நகர...அதற்கு முன்பே வீழ்கின்றன குண்டுகள் புலிகளின் பங்கர்கள் மீது...

துல்லியமாகத் தாக்குகின்றன கபீர் விமானங்கள்.

அது போதாதென்று பீரங்கிகளும் கவச வாகனங்களும்...

எல்லாம் மழையாய்ப் பொழிய.... மடிந்தே போகிறார்கள் புலிகள்.அந்த பங்கர்களுக்குள்...

மடிந்தவர்கள் போக..எஞ்சியவர்கள் பின்னோக்கி...

ஆனால்,படையினரோ முன்னோக்கி...

வெற்றிகரமாக நகர்த்திச் செல்கிறார் லெப்டினன் ஐ.பி.ஜயரத்ன.





ஐ.பி.ஜயரத்ன



12 ஆவது தரைப்படையின் ட பிரிவின் லெப்டினன்.

நந்திக்கடல் யுத்த சூனிய பகுதிக்குள் நுழைந்த முதல் வீரர் அவர்.

அவரது கட்டளை தளபதி கேப்டன் ஹேவ பாதகே.

நெருங்க நெருங்க கடும் தாக்குதல். புலிகளிடமிருந்து...

புலிகளின் பலமான கோட்டை அது.இறுதி கோட்டையும் அதுதான்.

பிரபாகரன் இறுதியாக் இருந்த இடம். அங்கிருந்துதான் பின்வாங்குகிறார் நந்திக்கடல் களப்புக்குள்.

அதற்குள் முதலில் நுழைகிறது 12 ஆவது படையணியின் உ அணி.லெப்டினன் வீரசிங்க தலைமையில்...

நுழைந்துவிட்டார்கள். ஆனால்,சிக்கிவிட்டார்கள்.

கடும் தாக்குதல் புலிகளிடமிருந்து. அவர்களின் பலமான கோட்டையல்லவா.

படையினருக்கு கடும் சேதம்.காயம். உயிரிழப்பு .

தொடர்புகொள்ள முடியவில்லை.ஊ அணியை...

செட் ஒப்பரேட்டர் நீருக்குள்.அந்த செட்டும் அதற்குள்...

பல சடலங்கள் அங்கே. காயமடைந்தவர்களும் கூடவே...

ஜயரத்னவின் அணி.இரண்டாவது பங்கரில்...

சத்தம் வைக்கிறார் வீரசிங்கம்.கேட்கிறது ஜயரத்னவுக்கு....

அவர்களை மீட்க வேண்டும்.

இதனால் உள்நுழைகிறது அடுத்த அணி.12 ஆவது படை அணியின் ட அணி. லெப்டினன் ஐ.பி ஜயரத்ன தலைமையில்....

(அடுத்த வாரம் தொடரும்...)








**மஹிந்த பிரதமராக நியமிக்கப்படவுள்ளார் என்று சொல்லப்படுவதால் ஏதும் உண்மை உண்டா?**

**கடந்த வாரம் திடீரென கொழும்பில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதே.**

**போராட்டக்காரர்களின் விருப்பத்துக்கு இப்போது என்ன நடந்துள்ளது.**

**பல பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. குறைத்துக்கொண்டு செல்கின்றன. பொருளாதாரம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது அல்லவா?**



# சஜித்தை அழித்துவிடுவார் ரணில்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி :மஹிந்த பிரதமராக நியமிக்கப்படவுள்ளார் என்று சொல்லப்படுவதில் ஏதும் உண்மை உண்டா?**

பதில் : இதில் ஒரு அடிப்படை உண்டு. மக்கள் அதிகாரம் இல்லாத ஒரு குழு இப்போது நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள அந்த அதிகாரத்தைப் பிரித்து எடுப்பதில் அந்தக் கட்சிக்குள் போட்டி நிலவுகிறது.

மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதி ரணில்.நாடாளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை இல்லை.

மொட்டுத் தலைவரை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு மொட்டு கட்சியில் சிலர் இப்போது ரணிலுடன் இணைந்து வேலை செய்கின்றனர்.அது அதிகாரத்தைப் பகிர்ந்து எடுப்பதற்காக.

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்களும் ரணிலுடன் இணையும் நிலை ஏற்பட்டுள்ளது.அதுவும் பதவிக்காக.

இப்போது மஹிந்த பிரதமராகப் போகிறார் என்று கதை அடிபடுகிறது.அது நடக்காது என்று சொல்ல முடியாது.

இவர்கள் எல்லோரும் அடிபடுவது மக்களுக்காக அல்ல.மக்களுக்கு சேவை செய்வதற்காக அல்ல.பதவிக்காக மட்டும்தான்.

**கேள்வி : இதன் மூலம் போராட்டக்காரர்களின் விருப்பம் குப்பைத் தொட்டியில் போடப்படுகிறது அல்லவா?**

பதில் :இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசை மக்களை விரட்டியடித்தனர்.

இது மக்கள் போராட்டம்.இந்தப் போராட்டத்தில் எங்களது பங்கும் உண்டு. ஆனால்,நோக்கத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் எம்மிடம் இருக்கவில்லை.

அந்த அரசை விரட்டிய பின் தாம் எதிர்பார்க்கும் அரசு உருவாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

ஜனாதிபதியை விரட்டியபோதும் மக்களே ஜனாதிபதி ஒருவரைப் புதிதாக நியமிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.இந்த ஆட்சியாளர்கள் நாடாளுமனறத்தின் ஊடாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துவிட்டார்கள்.

ஆனால், அந்த போராட்டம் நாடாளுமன்றத்தை கலைக்கும் நிலைக்குச் சென்றிருந்தால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டிருக்கமாட்டார்.

நாடாளுமன்றம் கலைந்திருக்கும்.புதிய நாடாளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதி தேர்தலும் நடந்திருக்கும்.அதன் ஊடாக மக்கள் தாங்கள் விரும்புகின்ற ஜனாதிபதியை-எம்பிக்களை நியமிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

அந்த வாய்ப்பை சிலர் ரணிலுக்கு பெற்றுக்கொடுத்துவிட்டனர்.

தம்மை பொருளாதார ரீதியில் சிக்கலுக்குள் தள்ளிய ஆட்சியாளரை விரட்டியடித்த சந்தோசம் மக்களுக்கு உண்டு.ஆனால்,அதே நிர்வாகம் மீண்டும் உருவாகியுள்ளது.

**கேள்வி : கடந்த வாரம் திடீரென கொழும்பில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதே?**

பதில் : ரணில் அச்சத்தில் உள்ளார். அவருக்குத் தெரியும் அவர் தொடர்பிலான மக்களின் நிலைப்பாடு என்னவென்று.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட கோத்தாவுக்கே இந்த நிலைமை என்றால் நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட-மக்கள் ஆணை அறவே இல்லாத ரணில் விக்ரமசிங்கவுக்கு எ ந்த நிலைமை ஏற்படும் என்று அவருக்குத் தெரியும்.

அவர் மக்களுக்கு மட்டுமல்ல மக்களின் நிழலுக்குக்கூட அஞ்சுகிறார்.

அந்த பயத்தின் காரணமாகவே அவர் கடந்த வாரம் கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்தினார்.

**கேள்வி : ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா?**

பதில் : அதற்கு மொட்டில் இப்போது எஞ்சி இருக்கின்ற வாக்குகளை அவர் பெற வேண்டும்.அப்படியென்றால் ரணில் மொட்டு கட்சியை அப்படியே ஏற்க வேண்டும்.

அப்படி ஏற்பதுதான் அவரது தோல்விக்கு காரணமாக அமையும். நாமல்,ஜோன்சன் ,பசில் போன்றவர்கள் ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தால் என்ன நடக்கும் என்று பாருங்கள்.ரணில் அப்போதே தோல்வியடைந்துவிடுவார்.

இது அவருக்குத் தெரியும். அதனால்தான் மொட்டுக்கட்சியை முழுமையாக எடுக்காமல் அதில் ஒரு துண்டை மாத்திரம் எடுப்பதற்கு முயற்சி செய்கிறார்.

அப்படி அவர்கள் கழன்று ரணிலுடன் சென்றாலும் இப்போது மொட்டுக்கு இருக்கின்ற கொஞ்ச வாக்குகள்கூட ரணிலுக்கு கிடைக்காது.

உறுப்பினர்கள் மட்டும்தான் ரணிலுடன் இணைவார்கள்.வாக்குகள் அல்ல. அவருக்கு மிகவும் குறைந்த வாக்குகளே மொட்டு பக்கம் இருந்து கிடைக்கும்.

மொட்டின் நிரந்தர வாக்காளர்கள் ரணிலின் கொள்கைக்கு எதிரானவர்கள்.நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கும்-அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தலுக்கும் எதிரானவர்கள்.இதனால் அங்கிருந்து ரணிலுக்கு வாக்குகள் வராது.

ரணிலின் அடுத்த வாக்கு வங்கி இருப்பது ஐக்கிய மக்கள் சக்திக்குள்.அதில் இருந்து சிலரை கழற்றி எடுப்பதன் மூலம் அந்த வாக்குகள் வராது.அந்த வாக்குகள் இருப்பது சஜித்தை அடிப்படையாகக் கொண்டு.

அதனால்,அங்கும் உறுப்பினர்கள் சென்றால் அந்த வாக்குகள் பின்னால் செல்லாது. சஜித்துடன் இருந்துவிடும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியை ரணில் முழுமையாகப் பெறுவதென்றால் சஜித் முழுமையாக ரணிலுடன் இணைய வேண்டும்.

அப்படி சஜித்தை ரணில் ஏற்றுக்கொண்டால் ரணிலுக்கு பிறகு அடுத்த தலைவர் சஜித் என்ற நிலை உருவாகாது.சஜித்தை உள்ளே எடுத்து அழித்துவிடுவார் ரணில்.அது சஜித்துக்குத் தெரியும்.

இதனால் சஜித் உள்ளிட்ட குழுவினர் ரணிலுடன் சேர்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

அப்படியென்றால் எப்படி ரணிலால் ஜனாதிபதி தேர்தலில் வெல்ல முடியுமா? வெல்லவேமாட்டார்.

இதனால் அவர் அவரது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கே முயற்சி செய்கிறார்.இதற்கு அவருக்குத் தேவை. நாட்டில் அசாதாரண நிலைமை.

இதற்காகத்தான் அவர் பாதுகாப்பு படையினரை நிறுத்துகிறார்.மீண்டும் இனவாதம் அரசின் அனுசரணையுடன் இடம்பெறத் தொடங்கியுள்ளது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கொலைகள் செய்யப்பட்ட நாடு இது.அதிகாரத்தைப் பெறுவதற்காக ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்திய நாடு இது .

அப்படியான ஒரு மோசமான நிலைமையை ரணிலால் உருவாக்க முடியும்.அப்படி இல்லாமல் தேர்தலால் ரணிலின் அதிகாரரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்போவதில்லை.

இந்த நாட்டை நாசமாக்கியவர்களின் கைகளில் திரும்பவும் ஆட்சியை மக்கள் கொடுக்கப் போகிறார்களா என்று சிந்திக்க வேண்டும்.

.நாள் செல்ல செல்ல பிரச்சினைகள் கூடிக்கொண்டே போகின்றன. குறையவில்லை.

**கேள்வி : பல பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.குறைத்துக்கொண்டு செல்கின்றன.பொருளாதாரம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது அல்லவா?**

பதில் : பொருளாதாரம் முன்னேறுவது என்பது தேசியரீதியில் உற்பத்தி மற்றும் சேவை அதிகரிக்க வேண்டும்.அதற்கு மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

அதில் நியாயமான பங்கு மக்களிடம் செல்ல வேண்டும்.

இந்த உற்பத்தி இல்லமல் பொருளாதார பிரச்சினை தீராது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மேலும் 3 வீதத்தால் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியமே கூறியுள்ளது.

இது பொருளாதார முன்னேற்றம் இல்லை.தொழில்வாய்ப்புகள் குறைந்துகொண்டே செல்கின்றன. மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

68 வீதமான மக்கள் ஒருவேளை உணவைக் குறைத்துள்ளனர்.70 வீதமான மக்கள் மருந்துப் பொருட்களுக்கு செலவழிப்பதை நிறுத்தியுள்ளனர். 40 வீதமான மக்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செலவை நிறுத்தியுள்ளனர்.-என்றார்.

, J kj;jpa tq;fpapd; mwpf;i f

**மக்களால் தெரிவு செய்யப்பட்ட கோத்தாவுக்கே இந்த நிலைமை என்றால் நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட- மக்கள் ஆணை அறவே இல்லாத ரணில் விக்ரமசிங்கவுக்கு என்ன நிலைமை ஏற்படும் என்று ரணிலுக்குத் தெரியும்.**

# சஜித் பிரதமரா?



சஜித் பிரேமதாசா அரசில் இணையப்போகிறார் பிரதமர் பதவியை ஏற்கப் போகிறார் என்று சில நாட்களுக்கு முன் கதை பரவியது அல்லவா.

அந்தக் கதையை கேட்டு சஜித் தரப்பு எம்பிக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இதன் உண்மைத் தன்மை என்ன? உண்மையில் அவர் இணையப் போகிறாரா?

இதை அறிவதற்காக சஜித் தரப்பு எம்பிக்கள் சிலர் சஜித்தை சந்தித்து வினவியுள்ளனர்.

அவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

“பலவீனமான ஓர் அரசில் போய் இணைய வேண்டியதன் தேவை இல்லை.நாம் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிப்போம்.அரசு சும்மா வதந்திகளை பரப்பி மக்களை குழப்புகிறது“ - என்று பதில் வழங்கியுள்ளார்.




## ரணிலின் நினைவுக்கு வந்த ரஹ்மானியா ஹோட்டலின் சாப்பாடு

2030 ஆம் ஆண்டுக்கான கொள்கை வகுப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த வாரம் இரவு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ரணிலுடன் அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக,சாகல ரத்நாயக்க ஆகியோரும் உடன் இருந்தனர்.

அப்போது அதிகாரிகள் கொள்கை பற்றி விளக்கியபோது அது ரணிலுக்கு தெளிவைக் கொடுக்கவில்லை என்பதை சாகல ரத்நாயக புரிந்துகொண்டார்.

சமன் ஏக்கநாயக்கவின் காதுக்குள் இப்படி கிசுகிசுத்தார் சாகல ““ சேருக்கு ரஹ“மானிய ஹோட்டல் நினைவுக்கு வந்துட்டு போல ..““ என்றார்.

அதன் அர்த்தம்.அவருக்கு பசி வந்துவிட்டது.ர/ஹமானியா ஹோட்டலில் சாப்பிடும் நோக்கில் இருக்கிறார்.அதுதான் அவர்கள் சொல்வது ரணிலுக்கு விளங்குதில்லை என்பதாகும்.





## யானையை சுட்டு விரட்டிய யானை கட்சி செயலாளர்

கடந்த வாரம் ஐக்கிய தேசிய கட்சியின் முகாமைத்துவ கூட்டம் ஒன்று அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

அதில் ஒரு நகைச்சுவையான சம்பவம் ஒன்று பேசப்பட்டது. அது கட்சியின் செயலாளர் பாலித ரங்கேபண்டாவை யானை ஒன்று இடைமறித்த சம்பவம்.

கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அதை ரணிலிடம் கூறினர்.

ஆச்சரியமடைந்த ரணில் என்னவென்று விசாரித்தார் ரங்கேபண்டாவிடம்.

அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தொகுதிக் கூட்டங்கள் பலவற்றை வவுனியாவில் நடத்திவிட்டு வரும்போது செட்டிக்குளத்தைத் தாண்டி வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

அது என்னவென்று தேடிப் பார்த்தபோது நடுவீதியில் யானை ஒன்று நின்றுகொண்டு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

அங்கிருந்தவர்கள் கூறினார்கள் யானை விரட்டுவதற்கு துப்பாக்கியால் சுட்டுமாறு உடனே அவரது துப்பாக்கியால் மேல் நோக்கி சுட்டார்.யானை ரங்கேபண்டாவை திரும்பிப் பார்த்துக்கொண்டே காட்டுக்குள் ஓடியது அந்த யானை.

என்று ரங்கேபண்டா ஜனாதிபதியிடம் கூறினார்.

## மீண்டும் நான்காவது வரிசையில்




அவர் சீனியர். 30 வருடங்களுக்கு முன் அவர் முதன் முதலாக நாடாளுமன்றத்துக்கு வந்தபோது நான்காவது வரிசையில் அமர்ந்தார்.

பின்னர் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டு முன் வரிசையில் அமரத் தொடங்கினார்.

இந்தத் தடவை அவருக்கு அமைச்சுப் பதவி கிடைக்காததால் மீண்டும் 30 வருடத்துக்கு முன் இருந்த இடத்துக்கே சென்றுள்ளாராம்.

அதாவது,நாடாளுமன்றில் நான்காவது வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளாராம்.

இதை நினைத்துப் புலம்புகிறாராம் அந்த எம்பி.

மொட்டு எம்பிக்கள் 10 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருவது பெரும் பிரச்சினையாகத்தான் இருக்கிறது.

கடும் அதிருப்தியில் அவர்களுள் ஒருவர் நாடாளுமன்றில் நான்காவது வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் கடும் கவலை அடைந்துள்ளாராம்.

## சம்பிக்கவுக்கு பென்சில்



ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருக்கும் சம்பிக்க ரணவக்க அக்கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு முடிவெடுத்துள்ளமை பழைய செய்தி.

புதிய செய்தி என்னவென்றால் அந்தக் கட்சிக்கு அவர் தெரிவு செய்திருக்கும் சின்னம்தான்.பென்சில்தான் சின்னமாம்.

நாளை திங்கள் கிழமை மஹரகமவில் சம்பிக்க அவரது கட்சியை அறிமுகப்படுத்தி வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியிடம் வாங்கிக் கட்டிய எம்பிக்கள்




சில நாட்களுக்கு முன் கம்பஹா மாவட்ட எம்பிக்கள் இருவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அந்த சந்திப்பில் அவர்கள் இருவரும் ஜனாதிபதியிடம் கேட்டது என்ன தெரியுமா?

இந்திக்க அனுருத்தவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கி அந்தப் பதவியை சுதர்சனி பெர்னாண்டோ புள்ளைக்கு வழங்குமாறு.

இதைக் கேட்டதும் ஆத்திரமடைந்த ஜனாதிபதி, அப்படி நீக்குவதாக இருந்தால் முதலில் உங்களைத்தான் நீக்குவேன் என்று அவர்கள் இருவரையும் எச்சரித்து அனுப்பினாராம்.

## டலசின் புது வியூகம்



எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலை அடிப்படையாக வைத்து பல கட்சிகள் தங்களை பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளன.

அவற்றுள் ஒன்றுதான் டலஸ் அழகப்பெருமவின் கட்சி. அவர் சர்வதேச மட்டத்தில் கட்சியை விரிவுபடுத்தும் வேலையில் இப்போது இறங்கியுள்ளார்.

அண்மையில் பிரித்தானியா சென்ற டலஸ் நெதர்லாந்து,இத்தாலி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பல கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

அந்தக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வதுதான் திட்டமாம்.

அவர்களின் அனுபவம் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து கட்சியைப் பலப்படுத்துவதுதான் நோக்கமாம்.

உண்மை, உண்ணதம், தெளிவு......
இலங்கையின் தனித்துவமான ”உண்மைக்கே முதலிடம்”
www.puthusudar.lk

ரணிலின் நிர்வாகம்பற்றி ?

உங்கள் கட்சியில் இருந்து பலர் ரணிலுடன் சேர்ந்துவிட்டனர்.இன்னும் பலர் இணைவதற்குத் தயாராக உள்ளனர் என்று சொல்லப்படுகிறதே?

ரணிலும் சஜித்தும் ஒன்றிணைந்தால் மிகவும் இலகுவாக வெல்லலாம் அல்லவா?

உங்கள் கட்சி இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை விட்டுவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிறதா?

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு எதிர்ப்பு வந்தால் என்ன செய்வீர்கள்?



# அரசில் இருந்து பலர் விரைவில் எம் பக்கம்

இவ்வாறு பல கேள்விக ளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி ஹர்ஷண ராஜகருணா. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : நீங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?**

பதில் : மிகவும் சந்தோசம்.கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு மற்றுமொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்தப் பொறுப்பை நான் சரியாக நிறைவேற்றுவேன்.

**கேள்வி : ரணிலின் நிர்வாகம்பற்றி ?**

பதில் : அவருடன் நல்ல டீம் ஒன்று இல்லை.திறமையான டீம் இருப்பது ஐக்கிய மக்கள் சக்தியுடன்தான்.மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டவர்கள்தான் அவருடன் உள்ளார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் இப்போது ஜனாதிபதியாகி இருக்கிறார்.

மொட்டு கட்சியை சேர்ந்த சுமார் 50 எம்பிக்கள் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர்.ரணிலுடன் இருக்கின்ற மிகுதி எம்பிக்களும் மக்கள் ஆணையை இழந்தவர்கள்.

**கேள்வி : உங்கள் கட்சியில் இருந்து பலர் ரணிலுடன் சேர்ந்துவிட்டனர்.இன்னும் பலர் இணைவதற்குத் தயாராக உள்ளனர் என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : அரசுடன் எமது கட்சியைச் சேர்ந்த சிலர் இணைந்துள்ளனர்.அது சரியான முடிவல்ல.அங்கிருந்து 50 பேர் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளார்கள். எங்களது நால்வர் அரசு பக்கம் சென்றுள்ளார்கள்.

அப்படிப் பார்க்கும்போது அரசுதான் வீழ்ச்சியடைந்திருக்கிறது.ரணில் எதிர்காலத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு கஷ்டப்படுவார். எமது கட்சியில் இருந்து அரசுடன் இணைவதைவிட அரசில் இருந்து பலர் எதிர்கட்சிக்கு வரப்போகிறார்கள் என்பதுதான் உண்மை.

ஆனால், இதுபற்றியோ அல்லது எதிர்க்கட்சிக்கு ஏற்கனவே வந்துள்ள 50 பேர் பற்றியோ பேசுவதில்லை. எமது கட்சியில் இருந்து அரசு பக்கம் சென்ற நால்வர் பற்றியே பேசப்படுகிறது.

எனக்கும் அரசிடம் இருந்து அழைப்பு வந்தது.

எனது தந்தைக்கும் ரணிலுக்கும் இடையில் நீண்ட உறவு இருந்தது. அப்படியென்றால் நான்தான் முதலில் போய் இணைந்திருக்க வேண்டும்.

நான் தனிப்பட்ட உறவைப் பார்த்து அரசியல் செய்யவில்லை.கொள்கை அடிப்படையில் செய்கிறேன். அதனால்தான் நாம் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை உருவாக்கினோம்.

ரணிலுக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட பகை எதுவும் கிடையாது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் என்பதை மக்கள் கூறினார்கள். அதனால்தான் நாம் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகினோம்.

ரணில் அப்போது ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ பதவியை சஜித்துக்கு வழங்கி இருந்தால் ஐக்கிய தேசிய கட்சி அப்போதே ஆட்சியைப் பிடித்திருக்கும்.

தனிப்பட்ட முறையில் ரணிலுக்கான மரியாதை –நற்பு எல்லாம் உள்ளது.அதில் எந்தப் பிரச்சினை இல்லை.

**கேள்வி : ரணிலும் சஜித்தும் ஒன்றிணைந்தால் மிகவும் இலகுவாக வெல்லலாம் அல்லவா?**

பதில் : அப்படியான ஒரு பாரிய பலம் எமக்கு நாடாளுமன்றத்துக்குள் இல்லை.50 இற்கும் குறைவானவர்களே உள்ளோம்.

அப்படிச் செய்யப்போனால் கட்சி ஒன்று தேவை இல்லை.கொள்கை தேவை இல்லை.

ஒரு வருடம் பொறுத்திருந்து பூரண மக்கள் ஆணையுடன் ஆட்சி செய்வதற்கே நாம் எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி : உங்கள் கட்சி இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை விட்டுவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிறதா?**

பதில் : உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.அதை நடத்தாமல் இருப்பது–அதை நடத்துவதற்குப் பணம் கொடுக்காமல் இருப்பது சட்டவிரோதம். அதற்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் நாம் இருக்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெற வேண்டும்.அரசு அந்தத் தேர்தலுக்குத் தயாராகி வருவதை நாம் அறிந்தோம்.

எமக்குத் தேவை மக்களின் ஆணையைப் பெறுவதுதான்.அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் சரி.நாம் எல்லாத் தேர்தலுக்கும் தயாராகவே இருக்கிறோம்.

அதனால்தான் கடந்த வாரம் இடம்பெற்ற எமது கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசாவின் பேரை பிரேரித்தேன். அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கேள்வி :உங்களது கட்சிக்குள் அதிருப்தியடைந்த நிலையில் ஒற்றுமை இல்லாமல் பலர் உள்ளார்கள் என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : அப்படி இல்லை .99 வீதம் ஒற்றுமையாகவே இருக்கிறோம்.ஏதும் பிரச்சினை என்றால் போகிறவர்கள் போகலாம்.யாரையும் நாம் நாயைக் கட்டிப்போடுவதுபோல் கட்டிப்போடவில்லை.

கதைத்து கதைத்து இருப்பதை விட போவது நல்லம்.

அவர்கள் போனாலும் அவர்கள் மக்களிடத்தில் வாக்கு கேட்டுச் செல்ல வேண்டுமே.அப்போது தெரிய வரும் அவர்கள் எடுத்த தீர்மானம் சரியானதா அல்லது பிழையானதா என்று.

அப்படிச் செல்கிறவர்களுக்கு மக்கள் அடுத்த தேர்தலில் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்று நாம் நம்புகிறோம். பாடம் புகட்டுமாறு கோரிக்கையும் விடுகிறோம்.

**கேள்வி : அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு எதிர்ப்பு வந்தால் என்ன செய்வீர்கள்?**

பதில் : நான் நினைக்கவில்லை அப்படி எதுவும் நடக்கும் என்று.விரிவான கூட்டமைப்பு எம்மிடம் உள்ளது.அவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் சஜித்தான் பொது வேட்பாளர் என்று.

**கேள்வி : தேசிய அரசு தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : அதற்கு நாம் எதிர்ப்பில்.அதில் நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற சில இடங்கள் உள்ளன.

**கேள்வி : மீண்டும் இனவாதம் தலைதூக்கியுள்ளதை அவதானிக்க முடிகிறதே?**

பதில் : இதை நாம் நூறு வீதம் எதிர்க்கிறோம்.நாம் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் எமது நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.எமது கட்சியின் நிலைப்பாடு அதுதான்.

சட்டம் எல்லோருக்கும் வேண்டும். அப்போதுதான் இனவாதத்தை கிளப்புபவர்களைத் தண்டிக்க முடியும்.

டாக்டர் ஷாபி விவகாரம் தெரியும்தானே. சும்மா இனவாதத்தைக் கிளப்பி சகோதர இனத்தைப் பகைக்கும் நிலை ஏற்பட்டது.இதுபோன்ற இனவாதத்தால்தான் 30 வருட போறும் இடம்பெற்றது.

அரசியல் இலாபம் அடைவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த இனவாத செயற்பாட்டை மக்கள் எதிர்க்க வேண்டும்.

**கேள்வி : பொருளாதார பிரச்சினையை ரணிலால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை மக்களுக்கு வந்துள்ளதே?**

பதில் : அது ஒரு மாயை.பெற்றோல் வரிசை இல்லை.கோட்டா முறைமையின் ஊடாக விநியோக அளவை கட்டுப்படுத்தியதால் இந்த நிலை. ஆனால்,விலை கூடியுள்ளது.

அதேபோல், மின் வெட்டு இல்லை. ஆனால்,மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதவாறு பல மடங்காக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம், தாறுமாறான வரி விதிப்பு. இலாபமீட்டும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் இடம்பெறுகிறது.

இப்படித்தானா பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பது?இதெல்லாம் ஒரு மாயை. – என்றார்.

> டாக்டர் ஷாபி விவகாரம் தெரியும் தானே. சும்மா இனவாதத்தைக் கிளப்பி சகோதர இனத்தைப் பகைக்கும் நிலை ஏற்பட்டது. இதுபோன்ற இன வாதத்தால்தான் 30 வருட போறும் இடம்பெற்றது. அரசியல் இலாபம் அடைவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த இனவாத செயற்பாட்டை மக்கள் எதிர்க்க வேண்டும்.



# ரணிலின் பக்கா ப்லான்

**2005 ஜனாதிபதி தேர்தலில் எந்த மக்கள் ரணிலைத் தோற்கடித்தார்களோ அவர்களை வைத்தே 2024 ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்குத் திட்டம் தீட்டியுள்ளார் ரணில்.**



ஆட்சியில் எவர் இருந்தாலும் முதல் செய்யும் பணி அவரது ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுதான். மக்கள் என்பது இரண்டாம் பட்சம்தான் அவர்களுக்கு.

அதுதான் இங்கேயும்...

நீண்ட காலமாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயன்று முயன்று தோற்றுப் போனவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

1999 ஜனாதிபதி தேர்தலில்தான் முதன் முதலாகப் போட்டியிட்டார் ரணில். அது சந்திரிக்காவை எதிர்த்து. ஆனால்,தோல்வியடைந்தார். சந்திரிகா இரண்டாவது தடவையும் ஜனாதிபதியான சந்தர்ப்பம் அது.

அடுத்த தேர்தல் 2005 இல். அப்போது ஐக்கிய தேசிய கட்சியின் செல்வாக்கு-ரணிலின் செல்வாக்கு சற்று அதிகரித்திருந்த தருணம்.ரணில் வெல்வதற்கு அதிக வாய்ப்பிருந்த நேரம்.

அந்தத் தேர்தலில் ரணிலை எதிர்த்துப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஸ வெற்றிபெற்றார். வெறும் ஒரு லட்சத்து 28 ஆயிரம் வாக்குகளால் ரணில் தோல்வியடைந்தார்.

உண்மையில் அந்தத் தேர்தல் நாடுபூராகவும் இடம்பெறவில்லை. வடக்கு-கிழக்கில் புலிகள் அப்போது தேர்தலை புறக்கணித்திருந்தார்கள். வாக்களிப்பதற்கு மக்களை அனுமதிக்கவில்லை.

வடக்கில் மீறி வாக்களிக்கச் சென்றவரின் கையையும் வெட்டினார்கள் புலிகள்.

அந்தப் புறக்கணிப்பு இல்லாவிட்டால் பல லட்சம் வாக்குகளால் -அதாவது வடக்கு-கிழக்கின் பெரும்பான்மை வாக்குகளால் வென்றிருப்பார் ரணில்.

வடக்கு-கிழக்கு மக்கள் அந்தத் தேர்தலில் ரணிலுக்கே வாக்களிப்பதற்குத் தயாராக இருந்தனர்.அதற்குக் காரணம் 2001 ஆம் ஆண்டு ரணில் புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தம்தான்.

அப்போது ரணில் பிரதமர். சந்திரிகா ஜனாதிபதி.நாடாளுமன்ற ஆட்சி ஐக்கிய தேசிய கட்சியின் வசம்.

அவர் அப்போது இடம்பெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார்.

அந்த ஒப்பந்தத்தால் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதுவும் வடக்கு-கிழக்கு மக்கள் மிகவும் நிம்மதியடைந்தனர்.

போரையும் போர் நிறுத்தத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தனர்.போர் நிறுத்தம்தான் பெரிதாகத் தெரிந்தது. அதனால் போர் முடிவுக்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர்.

வடக்கு-கிழக்கிற்கு வெளியில் உள்ள மக்களும் போர் நிறுத்தத்தையே விரும்பினர். அவர்களும் போரினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தெற்கிற்கும் போர் விரிவடைந்திருந்தது.பல குண்டு வெடிப்பு சம்பவங்கள் கொழும்பு உள்ளிட்ட பல ஊர்களில் இடம்பற்றன.

போரில் ஈடுபட்டு உயிரிழந்த சிங்கள இராணுவ வீரர்களின் உடல்கள் அவர்களது ஊர்களுக்குச் செல்லும்போது அந்த ஊரே கவலையில் மூழ்கும்.

இராணுவத்தில் உள்ள தமது உறவுகளை நினைத்து நினைத்து அவர்கள் நிம்மதி இழந்து போனார்கள்.இதனால் அவர்களும் அந்தப் போர் நிறுத்தத்தால் பெரும் நிம்மதியடைந்ததனார்.

அதனால் அவர்களும் ரணில் ஜனாதிபதியாவதையே விரும்பினார்.வடக்கு-கிழக்கு வாக்குகள் இல்லாமலேயே ரணில் வெல்வதற்கான வாய்ப்புகள் இருந்தன.

ஆனால்,ஜேவிபியினர் போர் நிறுத்த ஒப்பந்தத்தை எதிர்த்து அதைத் தோற்கடிப்பதற்காக மஹிந்தவுடன் கை கோத்தார்கள்.

அவரை வெல்லவைத்து போரைத் தொடங்க வேண்டும்அதனூடாக புலிகளை அழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்ததால் மஹிந்தவுடன் இணைந்து அவரின் வெற்றிக்காக உழைத்தனர். கடுமையாக உழைத்தனர்.

இறுதியில் ஒரு லட்சத்து 28 ஆயிரம் மேலதிக வாக்குகளால் மஹிந்தவை வெல்ல வைத்தனர்.

ரணில் வடக்கு-கிழக்கு வாக்குகளை நம்பி இருந்தார். ஆனால்,புலிகள் பார்த்த வேலையால் தோல்வியடைந்தார்.

புலிகளும் போர் நிறுத்தத்தை விரும்பவில்லை.அந்த ஒப்பந்தம் ஊடாக தமது இயக்கம் பிளவுபட்டுவிடும் பலவீனமடைந்துவிடும் என்று கருதினார் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

அந்தப் போர் நிறுத்தம் காரணமாகத்தான் கருணா அம்மான் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி இருந்தார்.புலிகள் இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டிருந்தது.

ரணில் ஜனாதிபதியாக வந்தால் ஆயுதம் இல்லாமலேயே-போர் இல்லாமலேயே-போர் நிறுத்தத்தை வைத்தே புலிகள் இயக்கத்தை ரணில் அழித்துவிடுவார் என்று உணர்ந்தார் பிரபாகரன்.

அதனால்தான் அவர் போரை விரும்பினார்.

பிரபாகரனும் போரை விரும்பினார்.பிரபாகரனின் எதிரிகளான ஜேவிபியும் போரை விரும்பியது.பிரபாகரன் போரை விரும்பியது அதனூடாக அவர்களை பலப்படுத்துவதற்கு.ஜேவிபி போரை விரும்பியது அதனூடாக புலிகளை அழிப்பதற்கு.

இருவரின் விருப்பமும் ஒன்றுதான். நோக்கங்கள்தான் வேறு.

மஹிந்த வெற்றிபெற்றார். போரைத் தொடங்கினார்.புலிகளைத் தோற்கடித்தார்.

அடுத்தது 2010 ஜனாதிபதித் தேர்தல்.அதில் ரணில் போட்டியிடவில்லை.காரணம் போர் வெற்றியின் பக்கமே

தேர்தல் வெற்றி செல்லும் என்பதால்.

அதனால் போர் வெற்றிக்கு சொந்தக்காரரான இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட எதிர்கட்சிகள் மஹிந்தவுக்கு எதிராக பொது வேட்பாராக இறக்கின.

அதில் மஹிந்த வெற்றிபெற்றார்.

அடுத்து 2015 ஜனாதிபதித் தேர்தல்.ரணில் அதிலும் போட்டியிடவில்லை.மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்கி வெற்றி பெற்றனர்.

இதனை அடுத்து 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் போட்டியிடவில்லை.ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் சஜித் பிரேமதாசா போட்டியிட்டார்.அதில் கோத்தா வெற்றிபெற்றார்.

2020 நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் படுதோல்வியடைந்தார்.

அப்படி தோல்வியடைந்து இருந்தவருக்குத்தான் திடீர் அதிஷ்டம் அடித்து ஜனாதிபதியானார்.

இப்போது அடுத்த ஜனாதிபதி தேர்தல் இடம்பெற இருப்பது 2024 இல்.அந்தத் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாக வேண்டும் என்ற திட்டத்தில் இருக்கிறார் ரணில்.

அதற்காக இப்போதே வாக்கு வங்கியை அதிகரிக்கும் வேலையில் இறங்கியுள்ளார்.அவர் குறி வைத்திருக்கும் வாக்கு வங்கிகளுள் முக்கியமானது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாக்கு வங்கியாகும்.

அதாவது,2005 இல் எந்த மக்கள் அவரைத் தோற்கடித்தார்களோ அவர்களை வைத்தே வெல்வதற்குத் திட்டம் தீட்டியுள்ளார்.

அதற்காக அவர் முக்கியமாக இரண்டு வேலைகளை செய்துள்ளார்.

ஒன்றுக்கு வடக்கு-கிழக்கிற்கு இரண்டு தமிழ் ஆளுநர்களை நியமித்தமை.அடுத்து வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காக தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளமை.

இந்த இரண்டு திட்டங்களின் ஊடாக ரணில் அந்த மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இது ரணிலின் பக்கா ப்லான்.

அது தேர்தலுக்கான-தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கான பக்கா ப்லான் என்று தமிழ் மக்கள் புரிந்துகொண்டால் ரணிலுக்கு அந்த வாக்குகள் கிடைக்குமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்

***



# ஜப்பானிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் Hayleys Agriculture

விவசாய தீர்வுகளை வழங்கும் இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான Hayleys Agriculture நிறுவனம், 40 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்து வரும் ஜப்பானிய Shizuoka Seiki நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

அதிநவீன ஜப்பானிய தொழில்நுட்பத்துடன், நாட்டின் தானிய பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்தும் முயற்சியின் அடிப்படையில், தானியங்களை பதப்படுத்தும் தொழில்நுட்பத்தில் தொடர்ந்து புத்தாக்க அம்சங்களை உருவாக்கி, புதிய Shizuoka Circulation வகை தானிய உலர்த்தியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

Shizuoka தானிய உலர்த்தியானது, வழக்கமான உலர்த்தும் முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீண்ட காலமாக நெருக்கடிக்குள்ளாகியுள்ள உள்ளூர் தானிய பதப்படுத்தும் தொழில்துறையின், தானிய உலர்த்தும் செயன்முறையில் புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

இத்தொழில்துறையின் பெரும்பகுதி தற்போது வெயிலில் உலர்த்தும் செயன்முறையை நம்பியுள்ளது. இங்கு நீண்ட உலர்த்தும் நேரம் மற்றும் குறைந்த நிலைக்கும் தன்மையின் காரணமாக அவற்றை ஆலையில் இட்டு நுகர்வுக்காக எடுக்கும் போது அதிக சேதத்திற்குள்ளாவதோடு, விதைகளாக பயன்படுத்துவதற்கான நோக்கத்தில் குறைந்த முளைப்பு விகிதத்தையும் ஏற்படுத்துகின்றது.

இந்தச் சிக்கல்களை மனதில் கொண்டே Hayleys Agriculture இந்த புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.




# ஹேமாஸ் 62 ஆவது முன்பள்ளி

ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தினால் அண்மையில் 62 ஆவது பியவர முன்பள்ளி, கொழும்பு, வனாதமுல்ல பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது. பியவர முன்னெடுப்பின் தந்திரோபாய பங்காளராக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தினூடாக, நாட்டில் ஆரம்ப சிறுவர் பராமரிப்பு மற்றும் விருத்தி (நுஊஊனு) தொடர்பான தேசிய நிகழ்ச்சிநிரலுக்கு தொடர்ச்சியான ஆதரவளிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் நிறுவப்பட்ட முதலாவது பியவர முன்பள்ளியாக இது அமைந்திருப்பதுடன், கொழும்பு மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த முன்பள்ளியின் மிருதுவான செயற்பாட்டை உறுதி செய்யும் பொறுப்பை கொழும்பு மாநகர சபை கொண்டிருக்கும்.

சகல சிறுவர்களையும் உள்வாங்கி, உள்ளடக்கமான உலகை உருவாக்கும் ஹேமாஸின் முயற்சிகளுக்கமைய நிறுவப்பட்டுள்ள, வனாதமுல்ல பியவர முன்பள்ளியினூடாக, குறைந்த வசதிகளைக் கொண்ட சமூகத்தின் 50 சிறுவர்களுக்கு பாதுகாப்பான, உயர் தரம் வாய்ந்த பயிலல் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

வனாதமுல்ல பகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் முக்கியமான ஆரம்ப சிறுவர் பராமரிப்பையும் அபிவிருத்தி நிலையத்தையும் பெற்றுக் கொடுக்கும் வகையில், ஹேமாஸ், அதன் பங்காளர்களுன் இணைந்து இந்த நிலையத்தை நிறுவியுள்ளதுடன்,

இதனூடாக சிறுவர்களுக்கு பயிலல், விளையாடல் மற்றும் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு ஆதரவான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

# வர்த்தக சுடர்



# விவசாயத்தை மேம்படுத்தும் DIMO

DIMO நிறுவனத்தின் விவசாயப் பிரிவான DIMO Agribusinesses ஆனது, நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கியதாக, Micro-Irrigation Solutions மற்றும்; protected cultivation systems முறைகள் உட்பட நவீன மற்றும் SMART தொழில்நுட்பங்களுடன் உள்ளூர் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு தற்போது முழுமையாகத் தயாராக உள்ளது.

DIMO Agribusinesses ஆனது, முன்னணி உலகளாவிய SMART Micro-Irrigation Solutions வழங்குநர்களான Rivulis மற்றும் Eurodrip உடன் இணைந்து, சில வருடங்களுக்கு முன்பு SMART Micro-Irrigation Solutions இனை நிறுவியது. Rivuliஎ மற்றும் Eurodrip ஆகியன micro-irrigation solutions மற்றும் துணை மேற்பரப்பு மற்றும் மேற்பரப்பு நீர்ப்பாசன தொகுதிகளுக்கான துணைப் பாகங்களை வழங்குகின்றன.

இதில் drip tapes, integral drip lines, online drippers, sprinklers, jets, lay flats, filterஎ, valves, உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் fertigation உள்ளிட்ட பல்வேற தொழில்நுட்ப முறைகளும் உள்ளடங்குகின்றன.

உலகப் புகழ்பெற்ற SMART Micro-Irrigation Solutions வழங்குநர்களுடனான இந்த கூட்டுறவின் மூலம், DIMO Agribusinesses ஆனது, உகந்த விளைச்சலை உறுதி செய்யும் வகையில் தற்போது குறிப்பிட்ட பயிர் சார்ந்த நீர்ப்பாசனம் மற்றும் உரமிடுதல் முறைகளை வழங்குகிறது.

# வாடிக்கையாளர்கள் மவுண்டன் சைக்கிள்கள்



C. W. Mackie PLC இன் FMCG பிரிவான SCAN தயாரிப்புகள் பிரிவின் முதன்மையான வியாபாரக்குறிகளில் ஒன்றான Scan Jumbo Peanut, சமீபத்தில் 6வது முறையாக 'Scan Jumbo Bonanza' நுகர்வோர் மேம்படுத்தல் செயற்திட்டத்தை நிறைவு செய்தது. இதில் 50 அதிர்ஷ்டசாலிகள் மவுன்டன் சைக்கிள்களைப் பெற்றனர்.

இந்த நிகழ்வு 28 ஏப்ரல் 2023 அன்று கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் (GOH) 50 அதிர்ஷ்ட வெற்றியாளர்கள், சிரேஷ்ட நிர்வாக ஊழியர்கள் மற்றும் ஏனைய நலன் விரும்பிகள் முன்னிலையில் நடைபெற்றது.

6 அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 10, 2022 வரை இரண்டு மாதங்களுக்கும் மேலாக இந்த மேம்படுத்தல் செயற்திட்டம்



நடைபெற்றது, மேலும் 120 இற்கும் மேற்பட்ட நகரங்களில் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. போட்டியில் கலந்து கொள்ள ஆர்வம் இருந்த வாடிக்கையாளர்கள், ஸ்கேன் ஜம்போ வேர்க்கடலையின் வெற்றுப் பொதியினை தங்கள் பெயர், முகவரி மற்றும் தே.அ.இல மற்றும் தொடர்பு இலக்த்துடன் P. O. Box 161, Colombo என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

Scan Jumbo Bonanza என்பது பல ஆண்டுகளாக தங்களுக்குப் பிடித்தமான வியாபாரக்குறியினை தொடர்ந்து தேர்ந்தெடுத்து வரும் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு வெகுமதி அளிப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும் இது.

# DFCC இன் விருது விழா

DFCC வங்கி, தனது பணியாளர்கள் மத்தியில் புத்தாக்கம் மற்றும் விரைவியக்கம் ஆகியவற்றிற்கான மேம்பாட்டில் அதிகளவில் முதலீடு செய்துள்ளது. DFCC வங்கியில் உள்ள புத்தாக்கம் மற்றும் விரைவியக்கம் சார்ந்த மாற்றம் ஆனது DFCC விரைவியக்க புத்தாக்க மையம் (Agile Innovation Centre) மற்றும் மனிதவள துறைகளால் ஒருங்கிணைக்கப்பட்டு வழிநடத்தப்படுவதுடன், இவை இரண்டும் வங்கியின் பணியாளர்களுக்கு உத்வேகம் அளிக்கின்றன. இந்த முயற்சியானது, சவாலான நவீன வணிக சூழலை திறமையாக கையாளும் திறனை வங்கிக்கு அளிக்கின்ற அதே சமயம், பணியாளர்கள் தலைமையிலான மாற்றத்தை ஊக்குவிக்கிறது.

DFCC வங்கியின் பணியாளர்களில் சிறந்த மற்றும் மிகவும் புத்தாக்க சிந்தனையாளர்கள் மற்றும் பிரச்சனைகளை தீர்ப்பவர்கள், சமீபத்தில் DFCC Agile design thinking Capacity Training certificate Awards 2023 என்ற நிகழ்வில் அங்கீகரிக்கப்பட்டனர்.

இது DFCC Agile Innovation Centre ஆல் வடிவமைக்கப்பட்ட ஒரு விசேட விருது வழங்கல் திட்டமாகக் காணப்படுவதுடன், சிந்தனை வடிவமைப்பில் மேன்மையாக செயற்படுகின்றவர்களை அங்கீகரிப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்றது.

வங்கியின் இடை நிலை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ நிர்வாகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 45 பணியாளர்களுக்கு 2022 இல் இது தொடர்பான பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. வங்கியின் ஒத்துழைப்புடன், Innovation Quotient (IQ) அணியின் நிபுணர்களால் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல அங்கீகார பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு, பயிற்சியாளர்கள் மற்றும் சக ஊழியர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் 34 பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.








# மக்கள் வங்கியின் "வெசாக் பாராயணம் ஓதல்"

மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் வெசாக் போயா தினத்தன்று "கீதாஞ்சலி வெசாக் பாராயணம் ஓதல்" என்ற வெசாக் பக்தி பாடல் ஓதல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புத்த பிரானின் பிறப்பு, ஞானம் மற்றும் முக்தி ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் வெசாக் தினத்தில் இப்பாராயணம் நடைபெற்றது. வெசாக் வலயத்தில் அமைந்த, யூனியன் பிளேஸ் கிளையில் வெசாக் பாராணய இசைப்பாடல் இடம்பெற்றதுடன், மக்கள் வங்கியின் கொழும்பு தெற்கு பிராந்தியத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்கள் வங்கியின் ஏதுகல்புர கிளையைச் சேர்ந்த எரந்தி முனசிங்க பாடல் வரிகளை எழுதியுள்ளார், அதே வேளையில் இசையமைப்பையும் பாடலுக்கான பயிற்சியையும் கொழும்பு யசோதரா வித்தியாலயத்தின் இசை ஆசிரியர் ரவ்னித்ரா சப்பரமாது மற்றும் கொழும்பு 02, பாதுகாப்பு சேவைகள் கல்லூரியின் இசை ஆசிரியர் லால் ரூபசிங்க ஆகியோர் மேற்கொண்டனர். மேலும், இக்கிளை வெசாக் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், வழிப்போக்கர்களுக்கு கோப்பி மற்றும் பிஸ்கட் தாகசாந்தியும் வழங்கி உபசரிக்கப்பட்டது.




# கோடைகாலத்தில் புத்துயிரூட்டும் 7UP

7UP வர்த்தகநாம தூதரும் சூப்பர்ஸ்டாருமான ராஷ்மிகா மந்தனா நடித்துள்ள சூப்பர்–டூப்பர் புத்துணர்ச்சியூட்டும் கோடைகால பிரசாரத்தை 7UP® அண்மையில் வெளியிட்டுள்ளது. 7UP® உடன் ராஷ்மிகாவின் அனுபவத்தை இந்த காணொளி காட்டுகிறது.அத்துடன் இது இலங்கை முழுவதும் 7UP® இனது புதிய வாசகமான 'ஞரிநச னுரிநச சுநகசநளாநச' என்பதை உயிரூட்டுகிறது.

ஒரு வெப்பமான, வெயில் நாள் கொண்ட காட்சியில் ஆரம்பிக்கும் இப்புதிய காணொளியில், ராஷ்மிகா கடைக்காரர் ஒருவரிடம் 7UP® ஒன்றை கோருவது காட்டப்படுகின்றது. கடைக்காரர் ராஷ்மிகாவிடம் 7UP® குளிரூட்டப்பட்ட போத்தலைக் கொடுக்கிறார்.ஆனால் அவர் அதனை ஒரு வித்தியாசமான உணர்வுடனேயே கொடுக்கிறார்.

இது ராஷ்மிகாவை குழப்பத்தில் ஆழ்த்துகிறது. ராஷ்மிகா 7UP® போத்தலைத் திறக்க, காட்சியானது தொலைதூரத்திலுள்ள பனிப்பாறை பகுதிக்கு மாறுகிறது. அங்கு ஒரு நீர்க் குமிழ், புத்துணர்ச்சியை ஆக்கப்பூர்வமாக சித்தரிக்கிறது.

அது மெதுவாக உருவாகி, பனி மூட்டமான மலைகளைக் கடந்து, ராஷ்மிகா தனது வாய்க்கு அருகில் போத்தலை கொண்டு வர அது அவரை நோக்கி வருகிறது. இந்த 7UP® போத்தலானது, நீங்கள் எங்கிருந்த போதிலும், புத்துணர்ச்சியின் இறுதி வடிவத்தை உங்களை நோக்கி இழுக்கும் காந்தம் போன்றது என்பதை அது காட்டுகிறது.

வர்த்தக சுடர்

Uber வாடிக்கையாளர்கள் தவறுதலாக

# விட்டுச் செல்லப்பட்ட பொருட்களின் விபரங்கள்!




இலங்கையின் முன்னணி ஓட்டுநர் உதவி வழங்குநர் செயலியான ருடிநச, தமது வாடிக்கையாளர்களினால் தவறுதலாக விட்டுச் செல்லப்பட்ட பொருட்களின் விபரத்தை அதன் Lost and Found Index இன் 2023 பதிப்பில் பகிர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு Ubers இல் பயணிகள் விட்டுச் சென்ற பொதுவான மற்றும் தனித்துவமான பொருட்களை பற்றிய விவரங்களையும், பயணிகள் அதிகம் மறக்கும் நேரங்களையும் இந்த வருடாந்திரப் பட்டியல் பகிர்ந்து கொள்கிறது.

கோழி, கித்துள் சர்க்கரை, மா, திரைப்பட டிவிடிகள், தங்க நகைகள், ஐபோன் (கையடக்கத் தொலைபேசி), தண்ணீர் போத்தல்கள் என பலதரப்பட்ட பொருட்களை இலங்கையர்கள் தாம் பயணித்த Uber வாகனங்களில் விட்டுச்சென்றுள்ளனர். தரவு போக்கின் (data trend) உதவியுடன், Uber இன் Lost and Found Index ஆனது, பயணிகள் தமது பொருட்களை Uber வாகனகத்தில் மறந்து விட்டு சென்றால், ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் எவ்வாறு மீளவும் பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாக வேடிக்கையான ஆனால் பயனுள்ள முறையில் கற்பிப்பதை Lost and Found Index நோக்கமாகக் கொண்டுள்ளது.





# அலியான்ஸ் லங்கா, நவலோக வைத்தியசாலை இடையே ஒப்பந்தம்

Allianz Global Healthcare காப்புறுதிதாரர்களுக்கு பிரத்தியேகமான மற்றும் நிகரற்ற வரப்பிரசாதங்களை வழங்குவதற்காக, உலகளாவிய Allianz SE குழுமத்தின் உறுப்பு நிறுவனமும், முன்னணி காப்புறுதி சேவை வழங்குநருமான அலியான்ஸ் லங்கா, அண்மையில் நவலோக வைத்தியசாலைகள் குழுமத்துடன் ஒரு கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது.

காப்புறுதிதாரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு முழுமையான மருத்துவ காப்புறுதித் திட்டமானது வைத்தியசாலை சிகிச்சையைப் பெறுவதற்கு முன் ஆரம்பித்து, வைத்தியசாலை சிகிச்சை நிறைவடைந்து வெளியேறிய பின் வரையில் உலகெங்கிலும் எந்த இடத்திலும் உயர் தரமான, உலகத்தரம் வாய்ந்த மருத்துவப் பராமரிப்பு வசதிகளுக்கு Allianz Global Healthcare Insurance எனப்படும் உலகளாவிய அலியான்ஸ் மருத்துவக் காப்புறுதித் திட்டம் உத்தரவாதம் அளிக்கின்றது.


Allianz Global Healthcare Insurance காப்புறுதித் திட்டத்தின் பல்வேறு நன்மைகள் மத்தியில் உலகளாவில் மருத்துவமனை சிகிச்சை காப்புறுதி, கொவிட்-19 காப்புறுதி, குடும்பத்தினருக்கான விசேட தள்ளுபடிகள், 64 வயது வரையில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் தகைமை, தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சை (வெளிநாடு), மருத்துவ சிகிச்சைகளுக்கான அவசர வெளியேற்றம் மற்றும் திரும்புதல், 24/7 அவசர உதவி, நேரடி தீர்வுக் கொடுப்பனவு வசதிகள் மற்றும் பல அடங்கியுள்ளன.

அலியான்ஸ் லங்கா மற்றும் நவலோக வைத்தியசாலைகள் குழுமம் ஆகியவற்றுக்கு இடையேயான புதிய கூட்டாண்மையின் ஊடாக, நவலோக வைத்தியசாலைகளில் பிரத்தியேகமான வரப்பிரசாதங்களுடன் காப்புறுதிதாரர்களுக்கு இந்த விரிவான நன்மைகள் மேலும் அதிகரிக்கப்படும்.

# 225 ஆவது "செலான் பஹசர" நூலகத் திட்டம்







வங்கி செலான் வங்கியின் ஒரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட செலான் பஹசர திட்டத்தினூடாக, நாடளாவிய ரீதியில் பின்தங்கிய பாடசாலைகளில் நூலகங்களை நிறுவும் திட்டத்தில், 225 ஆவது நூலகம் அண்மையில், மஹரகம, தர்மாசோக ஆரம்ப பாடசாலையில் திறந்து வைக்கப்பட்டது.